**“சமுத்திரப் பாதுகாப்பு: தெற்காசியா மற்றும் இந்து சமுத்திரம்” எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற மாநாட்டில்**
**தூதுவர் ஜூலீ ஜே. சங் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்**
**ஒக்டோபர் 16, 2023, காலை 9 மணி முதல் 11:30 மணி வரை**
**Courtyard by Marriott**

அனைவருக்கும் காலை வணக்கம்! இன்று இங்கு இருப்பதிலும் உங்களனைவரையும் வரவேற்பதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக எங்களுடன் இணைந்து கொள்வதற்காக வொஷிங்டன் DC இல் இருந்து பயணம் செய்து இங்கு வருகை தந்திருக்கும் எமது அமெரிக்க சமாதான நிறுவனத்தின் சகாக்களான நிலந்தி சமரநாயக்க, டொக்டர் டேனியல் மார்கி, டொக்டர் அஸ்பான்-டயார் மிர் ஆகியோரை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்று எங்களுடன் இணைந்திருக்கும் இராஜதந்திர மட்டத்திலுள்ள எனது சகாக்களான பிற தூதரகங்களின் பிரதானிகளையும் இங்கு அங்கீகரிப்பதற்கு நான் விரும்புகிறேன்.

இன்று காட்சிப்படுத்துவதற்காக சுருக்கக் குறிப்புகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுப்பதில் உறுதியுடன் இருந்தமைக்காக மூலோபாய கற்கைகளுக்கான பிராந்திய மத்திய நிலையத்தைச் சேர்ந்த எமது மாநாட்டு ஏற்பாட்டாளர்களான பேராசிரியர் நயனி மெலேகொட மற்றும் கலாநிதி ஜோர்ஜ் குக், ஆகியோருடன் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக இங்கு முன்வைப்புகளை மேற்கொள்ளும் அனைத்து ஆசிரியர்களையும் பாராட்ட நான் விரும்புகிறேன். மிகவும் பொருத்தமான தலைப்புகளை ஆராய்வதற்கான உங்களது அர்ப்பணிப்பானது தெற்காசியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கான தீர்வுகளைத் தேடும் எமது முயற்சிகளை ஒரு படி மேலே உயர்த்துகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நிர்வாகம், அமைதியைக் கட்டியெழுப்புதல், நீலப் பொருளாதாரம், பாரம்பரிய வர்த்தகம் மற்றும் சமுத்திரப் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் தொடர்பான உங்களது ஆய்வுகள் பற்றி மேலும் அறிய நாங்கள் அனைவரும் ஆர்வமாக உள்ளோம்.

இன்று இங்குள்ள மாணவர்களும் அறிஞர்களும் இந்தியா, ஜப்பான், மாலைதீவுகள், நியூசிலாந்து மற்றும் இலங்கை போன்ற தெற்காசிய, கிழக்காசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு வகையான கல்வி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அவர்கள் நிபுணத்துவத்தின் ஒரு செல்வத்தை கொண்டு வருகிறார்கள். அவர்களின் ஆராய்ச்சித் தலைப்புகள் குறிப்பாக அமெரிக்க இந்தோ-பசிபிக் வியூகத்தின் அடிப்படைக் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன. சுதந்திரமான, திறந்த, இணைக்கப்பட்ட, செழிப்பான, பாதுகாப்பான மற்றும் மீண்டெழும் தன்மையுடைய இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை பேணிவளர்ப்பதற்கான எங்களது உறுதிப்பாட்டை அவை வலியுறுத்துகின்றன.

இலங்கை நடாத்திய Indian Ocean Rim Association Council of Ministers மற்றும் Galle Dialogue International Maritime Conference ஆகிய மாநாடுகள் நிறைவடைந்த நிலையில் இம்மாநாட்டை நடத்துவதற்கு இதைவிடச் சிறந்த ஒரு வாரம் இருக்க முடியாது. IORA மாநாட்டில் பலதரப்பு மற்றும் இராஜதந்திரம் ஆகிய விடயங்களில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் அமைதி, ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவது குறித்து வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி பேசினார். அத்துடன் காலி உரையாடலில், வளர்ந்து வரும் புதிய உலக ஒழுங்கில் இந்தோ பசிபிக்

பகுதியை எவ்வாறு வரையறுப்பது மற்றும் அது பொருளாதாரம் அல்லது பாதுகாப்பு கட்டமைப்பிற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பது பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசினார்.

அதை நாம் எப்படி வரையறை செய்தாலும், ஜனாதிபதி பைடன் கூறியது போல், இந்தோ-பசிபிக் என்பது எல்லையற்ற ஆற்றலைக் கொண்ட ஒரு பரந்த பகுதியாகும். கடல்சார் பாதுகாப்பு, நாடுகடந்த வர்த்தகம் மற்றும் பிராந்திய இணைப்பு போன்ற துறைகளின் திசை மற்றும் அபிவிருத்தியை வடிவமைக்க உதவுவதில் இலங்கை ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதற்கு மேலதிகமாக, எந்தவொரு அல்லது அனைத்து தெற்காசிய நாடுகளையும் உள்ளடக்கிய பலதரப்பு ஈடுபாடுகளை நடத்துவதற்கும் கூட்டுவதற்கும் இயலுமையுடைய மற்றும் தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவுடனும் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு அணிசேரா நடுநிலையான நாடு என்பதில் இலங்கை பெருமை கொள்கிறது. எனது பணி வாழ்க்கையின் ஒரு பெரும்பகுதியை தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவில் கழித்த நான், இலங்கைக்கு வந்தபோதுதான், ஏற்கனவே பலருக்குத் தெரிந்த ஒரு விடயத்தை உணர்ந்தேன் – அதாவது இலங்கை தனது ஆற்றலையும் தாண்டி செயலாற்றுகிறது; சிலவேளை அதற்கே அந்த விடயம் தெரியாது. அதாவது பொருளாதாரநெருக்கடி நிலையிலிருந்து வெளியேறுவதும் நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதும். அதாவது, முன்முயற்சிகள் அல்லது கொள்கைகளுக்கு எதிர்வினையாற்றுவது மட்டுமன்றி, பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு தனது அனுபவம், புதுமையான சிந்தனை, மனித வள திறன் போன்ற பெறுமதிமிக்க ஒன்றை செயற்பாட்டு ரீதியில் வழங்குவதற்காக தனது சுய ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான நம்பிக்கையையும் இலட்சியத்தையும் இலங்கை கொண்டிருப்பதும் மிக முக்கியமாகும்.

பிராந்திய மூலோபாயங்கள் மற்றும் பலதரப்பு தளங்கள் நாடுகளுக்கு பகிரப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் குரல்களை ஒன்றிணைக்கும் வாய்ப்பையும் வழங்குவதனால் பரந்த இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒரு சக்திவாய்ந்த ஒன்றுபட்ட செல்வாக்கினையும் உருவாக்குகிறது. BIMSTEC, ASEAN மற்றும் இலங்கை சமீபத்தில் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற IORA என்பன அதற்கான அண்மையிலுள்ள சில சிறந்த உதாரணங்களாகும். இந்த ஒன்றிணைந்த முன்முயற்சிகள், பிராந்தியத்தின் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்கும், புவிசார் அரசியல் என்பது பூஜ்ஜியத் தொகை விளையாட்டாக (அதாவது ஒரு தரப்பின் வெற்றியானது இன்னொரு தரப்பின் தோல்வியாக) இருக்க வேண்டியதில்லை என்பதை எடுத்துக்காட்டவும் எம்மை ஊக்குவிக்கிறது. இதன் அர்த்தம் ஒரு நாடு மேற்கொள்ளும் ஒவ்வொரு வெளியுறவுக் கொள்கை முடிவுகளிலும் அனைத்து நாடுகளையும் மகிழ்விப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதல்ல. உங்களுக்கிருக்கும் இறையாண்மையின் உரிமையை விட்டுக் கொடுக்காமல் தெளிவான பார்வையுடன் முடிவுகளை மேற்கொள்வது என்பதே இதன் அர்த்தமாகும்.

இலங்கையின் அபிலாஷைகள் மற்றும் நோக்கங்களை அமெரிக்கா அங்கீகரிப்பதுடன் அவற்றை மதிக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும் என நான் விரும்புகிறேன். உலக அரங்கில் தனது மதிப்பீடுகள் மற்றும் தன் மக்களின் தேவைகள் மற்றும் நலன்களுக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ளும் ஒரு சமமான நாடாக இலங்கையை நாம் அங்கீகரிக்கிறோம். உண்மையில், இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டுகளை நாம் நிறைவு செய்கையில் எமது இருதரப்பு உறவை வழிநடத்துவதற்கு அக்கோட்பாடுகள் எமக்கு உதவுகின்றன.

இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்காக நாம் வழங்கும் ஆதரவின் சில உறுதியான உதாரணங்களைப் பார்ப்போம். ஓகஸ்ட் மாதத்தில் அமெரிக்க இந்தோ-பசிபிக் கட்டளை மற்றும் இலங்கை கடற்படையின் ஒன்றிணைந்த முயற்சியான இந்தோ-பசிபிக் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றத்தை ஆரம்பித்து வைக்கும் பெருமை எனக்குக் கிடைத்தது. நாங்கள் இதை ஒன்றாக இணைந்து நடத்துவது இதுவே முதல் முறையாகும். காலநிலை மாற்றம் மற்றும் பாதுகாப்பு; நில பாதுகாப்பும் தேசிய மீண்டெழும் தன்மையில் அது ஏற்படுத்தும் தாக்கங்களும்; கடல்சார் மற்றும் நீர் பாதுகாப்பு; நகரமயமாக்கல் ஏற்படுத்தும் பாதுகாப்பு தாக்கங்கள்; மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கியமான தலைப்புகளைப் பற்றி விவாதிப்பதற்காக 28 நாடுகளைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கொழும்பில் ஒன்றுகூடினர். காலநிலை நெருக்கடியானது எம் அனைவரையும் பாதிக்கிறதெனினும் குறிப்பாக இலங்கை போன்ற தீவு நாடுகளில் அதன் தாக்கம் கடுமையாக உள்ளது. இது போன்ற நிகழ்வுகள் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், நிலைபேறான இராணுவ நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலமும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சவால்களை ஒத்துழைப்புடன் எதிர்கொள்வதன் மூலமும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தினை பொறுப்புடன் நிர்வகிப்பதைப் பேணிவளர்க்கின்றன.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வு என்று வரும்போது, இலங்கையின் கடல்சார் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்கான திறனை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் உதவி செய்வதில் அமெரிக்கா முன்னணியில் உள்ளது. இலங்கையின் பொருளாதார வளங்களைப் பாதுகாப்பதற்கும் அதற்குரிய கடற் பிராந்தியத்திலும் அதற்குரிய பிரத்தியேக பொருளாதார வலயத்திலும் நடைபெறும் நாடுகடந்த குற்றச் செயல்களுக்கு பதிலளிப்பதற்கும் உதவியாக அமையும் வளங்களையும் சிறந்த நடைமுறைகளையும் நாங்கள் இலங்கையுடன் பகிர்ந்து கொள்கிறோம். கடற்கொள்ளை, கடலில் நடைபெறும் ஆயுதமேந்திய கொள்ளை, கடத்தல் ஆகிய விடயங்கள் அனைத்தும் கடல்சார் பாதுகாப்பை சீர்குலைக்கின்றன. சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்காக்கம் செய்யப்படாத மீன்பிடித்தலானது எதிர்கால சந்ததியினரின் செழிப்பிற்கு ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்கும் முழு பிராந்தியத்தினதும் நீலப் பொருளாதாரத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக அமைகிறது. அமெரிக்க அரசாங்கம் இலங்கை கடற்படைக்கு மூன்று கப்பல்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. கடந்த நவம்பரில் இலங்கைக் கொடியின் கீழ் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த விஜயபாஹு அவற்றுள் மிகஅண்மையில் வழங்கப்பட்ட கப்பலாகும். இலங்கையின் கடற்படையிலுள்ள கப்பல்களை பலப்படுத்துவதற்கான இம்முயற்சிகள் இலங்கையை பலமான மற்றும் செழிப்பான ஒரு நாடாக மாற்றுவதற்காக நாம் வழங்கும் அசைக்க முடியாத ஆதரவை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டின் செழிப்பை நோக்கிய அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் நீலப் பொருளாதாரம் பற்றி நான் குறிப்பிட்டேன். நிலைபேறான நீலப் பொருளாதாரங்களில் முதலீடு செய்வதானது, பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டுவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன எவ்வாறு பரஸ்பரம் ஒன்றையொன்று வலுவூட்டுகின்றன என்பதையும் எடுத்துக்காட்டும் விடயமாகும். அனைத்து கொள்கலன் கப்பல்களில் அரைவாசியும் மற்றும் எண்ணெய் ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கும் கடந்து செல்லும் உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் பாதைகளுக்கு மத்தியில் மூலோபாய ரீதியாக ஒரு முக்கியமான இடத்தில் இலங்கை அமைந்துள்ளது. பொருட்களின் உலகளாவிய வர்த்தகம் திறந்த கடல் வழியாக சுதந்திரமாகக் கடந்து செல்வதை உறுதிப்படுத்துவதானது இலங்கைக்கு மட்டுமன்றி, வர்த்தகம் மற்றும் பொருளாதார

அபிவிருத்திக்கு உதவி செய்வதற்காக சரக்குகளை சரியான நேரத்தில் விநியோகம் செய்வதைச் சார்ந்திருக்கும் உலகின் ஏனைய பொருளாதாரங்களுக்கும் மிகமுக்கியமானதாகும். இலங்கைக்கும் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் ஒரு வளமான நீலப் பொருளாதாரத்தை உறுதி செய்வதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் இந்தோ-பசிபிக் வியூகம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, USAID பொருளாதார அபிவிருத்தி, அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் நிதியிடல்கள், மிலேனியம் சவால் ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள், பாதுகாப்புத் துறையில் திறன் மேம்பாடு, உலகளாவிய சுகாதாரம் மற்றும் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் விளைவுகளிலிருந்து மீண்டெழும்தன்மையினை பலப்படுத்துவதற்கான உதவிகள் போன்ற வடிவங்களில் இந்தோ-பசிபிக் முன்னுரிமைகளுக்கான வெளிநாட்டு உதவிகளாக அமெரிக்க அரசாங்கம் 2 பில்லியனுக்கும் அதிகமான அமெரிக்க டொலர்களை அர்ப்பணித்துள்ளது.

இறையாண்மை, வெளிப்படைத்தன்மை, நல்லாட்சி, விவேகமான சீர்திருத்தங்கள் மற்றும் ஜனநாயக முறையில் அனைத்து தரப்பினர்களையும் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களிற்கு முன்னுரிமை அளிக்கும் போது, இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் இலங்கை வகிக்கக்கூடிய முக்கிய பங்கின் சாத்தியங்களுக்கு எல்லைகளே இருக்காது. இன்று இங்கு மேற்கொள்ளப்பட்ட முன்வைப்புகள், ஆய்வுகள் மற்றும் கோட்பாடுகளை நாம் செவியுறும் இவ்வேளையில், இலட்சியத்துடன் இருப்பதற்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இன்னுமதிகம் அமைதியான, வளமான, மற்றும் மீள்தன்மை கொண்ட பிராந்தியமாக மாற்றுவதற்கான எமது தொலைநோக்கினை மேலும் முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான வழிகளைத் தேடுவதற்கும் அமெரிக்காவானது இலங்கையுடனும் உங்களனைவருடனும் தோளோடு தோள் நிற்கும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன். உங்களனைவருக்கும் நன்றி.